செம்மையாக உடனுக்குடன் செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகையால் ஒவ்வொரு மாவட்டத்திலும் நம்முடைய அமைச்சர் அவர்கள் உள்ளாட்சி மன்றத் தலைவர்களுடைய கூட்டத்தை கூட்டி அந்த விளக்கங்களை எடுத்துச் சொல்வதற்கு முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 4 ஆண்டுக் காலம் ஆகிறது. அவர்களுடைய பதவிக் காலம் இன்னும் ஓராண்டில் முடிவுபெற இருக்கிறது. அவர்கள் நல்ல பயிற்சி பெற்று இருப்பார்கள் என்று தான் நம்புகிறேன். எனவே அப்படி ஏதாவது தேவைப்படுமாயின் பிறகு அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. ஆர். சிங்காரம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திற்கும் ஊராட்சி மன்றக் கட்டிடம் கட்டுவதற்கான செயற் குறிப்பு அரசிடம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன் .... (மணியடிக்கப் பெற்றது).

பேரூராட்சிகளில் ஆதி திராவிடர்களுக்கு வீடுகள் கட்டுதல்

*3327—திரு. க. சொ. கணேசன்:

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—:

கிராமங்களில் ஆதி திராவிட மக்களுக்கு அரசின் உதவியால் வீடு கட்டிக் கொடுப்பதைப் போன்று பேரூராட்சிகளிலும் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-90 ஆம் ஆண்டிற்கு இது குறித்து அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

திரு. க. சொ. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் புறத்தில் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதுபோல், பேரூராட்சிகளில் உள்ள ஆதி திராவிடர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டம் இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள். இது அவசியம் செய்யப்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இதற்கு அரசு திரும்ப பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

1990 சனவரி 25]

9-35 மணி

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989—90 ஆகிய நடப்பாண்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு கான்க்ரீட் கூரையுடன் கூடிய 42,000 தொகுப்பு வீடுகள் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கட்டி முடிப்பதற்கான அனுமதி அளிக்கப்பட்டு, ஓரளவுக்கு அந்த வேலையும் முடிவடையும் நிலையில் இருக்கிறது. அதனால் இதுவரை மாண்புமிகு உறுப்பினர் விரும்பியதை நிறைவேற்றும் சூழ்நிலை ஏற்படவில்லை. ஆனால் ஆகஸ்ட் திங்கள் 1989ஆம் வருஷம் வெளியிடப்பட்ட மைய அரசின் விளக்கத்தின்படி பரிசீலித்து, அடுத்த ஆண்டுக்கு அந்தத் திட்டத்தை விரிவுபடுத்தலாமா என்று ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

திரு. க. சொ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை அவசியம் அடுத்த ஆண்டு செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலான பேரூராட்சிகள் கிராமப்புற பேரூராட்சிகளாக இருக்கின்றன. அநேகமாக எல்லா கிராமங்களிலும் உள்ள ஆதி திராவிடர்களும் இன்றைய தினம் தனியாக ஒதுக்கப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பேரூராட்சி பகுதிகளில் வசிக்கும் ஆதி திராவிடர்களுக்கு தனியாக கான்கிரீட் வீடுகள் கட்டித் தர வேண்டும் என்று கோரிக்கை எழுப்பி இருக்கிறார்கள். எனவே இந்த ஆண்டு நடப்பு திட்டத்திலேயே அதை எடுத்துச் செய்வதற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: இந்த ஆண்டுக்குரிய தொகை அனைத்தும் திட்டமிடப்பட்ட இந்தப் பணிக்காக என்று ஒதுக்கப்பட்டு, பணிகளும் முடிவடையும் தருவாயில் இருக்கிறபோது நிதியை டைவெர்ட் பண்ணுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிகள் அர்பன் பேரூராட்சிகள் என்றும் ரூரல் பேரூராட்சிகள் என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அர்பன் பேரூராட்சிகளுக்கு இலவசமாக வீடு கட்டிக் கொடுக்கப்படுவதோ அல்லது மற்ற சலுகைகளோ ஏதும் கொடுக்கப்படுவதில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே அர்பன் பேரூராட்சிகளுக்கும் ரூரல் பேரூராட்சி

களுக்கும் வித்தியாசமில்லாமல்—இங்கேயும் மிகவும் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கிற காரணத்தால் அவர்களுடைய நிலையையும் உணர்ந்து அவர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி.மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டு பேரூராட்சிகளுக்கும் இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படும் என்ற நிலை வருமானால் நிச்சயமாக இரண்டு பேரூராட்சிகளுக்கும்—அவை இரண்டுமே ஒன்றாகக் கருதப்பட்டு—இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. நூர்முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்கு அரசினுடைய உதவியினால் கடந்த காலத்தில் கட்டிக்கொடுக்கப்பட்ட பலவீடுகள் முடிவடையாமலேயே இருப்பதுடன் பல இடங்களில் குடிபுக முடியாத அளவுக்கு சீர் கெட்டிருப்பதால் மக்கள் பயன்படுத்த முடியாத சூழ்நிலை கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்பட்டிருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அதை நிவர்த்தி செய்ய அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு தலைவர் அவர்களே, வேறு எந்த மாவட்டத்திலும்—கன்னியாகுமரி, மாவட்டத்தில் சொல்லப்படுவதுபோல்—இது போன்ற தகவல் இல்லை. சில மாவட்டங்களில் கால தாமதமாக வீடுகள் கட்டும் பணிகள் நடைபெறுவதாக அறியப்பட்டு அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம் அந்தப் பணியை துரிதப்படுத்துகிற சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறோம். அண்மையில் அவை முடிந்துவிடும் என்றும் அறிக்கை வந்திருக்கிறது.

கரும்பின் விலை

*2119—திரு. பொ. முருகேசன்:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சில மாநிலங்களிலுள்ளது போல் கரும்பின் விலையை விவசாயிகளுக்குக் கொடுத்து விட்டு வெட்டுக் கூலி, லாரி வாடகை போன்ற ஏனைய செலவுகளை ஆலை நிர்வாகமே ஏற்றுக் கொள்ளும் முறையை அரசு அமுல்படுத்துமா?